## பங்குனி உத்தரம் – பெருமாள் நாச்சியார் வார்த்தைகள்

தொகுப்பு: TCA Venkatesan

ஸ்ரீரங்கம் ஆதி ப்ரம்மோத்ஸவம் பத்து நாட்கள் உத்ஸவம்.

பங்குனி ரோஹிணி நாளன்று த்வஜாரோஹணம்.

ஆறாம் நாள் நம்பெருமாள் உறையூர் எழுந்தருள்வார்.

ஒன்பதாம் நாள் பங்குனி உத்தரம்.

பெருமாள் பல்லக்கில் புறப்பட்டு, திருவீதி வலம் வந்து, நாச்சியார் ஸன்னிதிக்குள் போகையில் மட்டையடி உத்ஸவம் நடக்கும்.

பெருமாளையும் நாச்சியாரையும் ஸமாதானம் செய்து வைக்க, நம் ஐயன் நம்மாழ்வார் வருவார்.

பெருமாள் தம்முடைய வார்த்தையை அரையரிடம் சொல்லி, அவரை ஆழ்வாருடன் உள்ளே அனுப்பி வைப்பார். அரையரும் அதை நாச்சியார் பரிகரமான பண்டாரியினிடத்தில் ஆழ்வார் மத்தியஸ்தமாகத் தெரிவிப்பார். பண்டாரி மூலமாக நாச்சியார் சொன்ன வார்த்தையை, ஆழ்வாருடன் வந்து பெருமாளிடத்தில் அரையர் சொல்வார்.

பெருமாள் அருளிச் செய்த வார்த்தைகள் ஐந்து; நாச்சியார் அருளிச் செய்த வார்த்தைகள் ஐந்து. இவைகளை, பாடல்களாக அரையர் விண்ணப்பம் செய்வார்.

---

## வார்த்தைகளின் விவரம்

### அரையரிடத்தில் பெருமாள் அருளிச் செய்த வார்த்தை 1:

"நாம் உத்ஸவார்த்தமாகப் புறப்பட்டருளி, திருவீதிகள் எல்லாம் வலம் வந்து, தேவதைகள் புஷ்ப வர்ஷம் வர்ஷிக்க, ப்ராம்மணர்கள் எல்லாரும் ஸ்தோத்திரம் பண்ண -

இப்படி, பெரிய மநோரதத்தோடே தங்களிடத்தில் வந்தால், தாங்கள் எப்போதும் எதிரே விடை கொண்டு, திருக்கை கொடுத்து, உள்ளே எழுந்தருளப் பண்ணிக் கொண்டு போய், திவ்ய ஸிம்மாஸனத்திலே ஏறியருளப் பண்ணி, திருவடி விளக்கி, திருவொத்துவாடை சாத்தி, திருவாலவட்டம் பரிமாறி, மங்களாலத்தி கண்டருளப் பண்ணி, சுருளமுது திருத்தி ஸமர்ப்பித்து -

இப்படி, அனேக உபசாரங்கள் எல்லாம் நடக்குமே.

இன்றைக்கு நாம் எழுந்தருளினவிடத்திலே திருக்காப்பு சேர்த்துக் கொண்டு, திருமுக மண்டலத்தைத் திருப்பிக் கொண்டு, திருச்சேடிமார்கள் கைகளாலே பந்துகளாலும் பழங்களாலும் விட்டெறிவித்து, இப்படி ஒரு நாளும் பண்ணாத அவமானங்களை எல்லாம் இன்றைக்குப் பண்ண வந்த காரியம் ஏதென்று கேட்டு வரவேணும்".

---

**பண்டாரி விண்ணப்பிக்கும் வார்த்தை 1:**

"தாம் எப்போதும் போலே எழுந்தருளினதே மெய்யானால் -

திருக்கண்கள் எல்லாம் சிவந்திருப்பானேன்?

திருக்குழல் கற்றைகள் எல்லாம் கலைந்திருப்பானேன்?

கஸ்தூரி திருமண் காப்பு கரைந்திருப்பானேன்?

திருவதரம் வெளுத்திருப்பானேன்?

திருக்கழுத்து எல்லாம் நககக்ஷதங்களாய் இருப்பானேன்?

திருமேனி எல்லாம் குங்குமப் பொடிகளாக இருப்பானேன்?

திருப்பரிவட்டங்கள் எல்லாம் மஞ்சள் வர்ணமாய் இருப்பானேன்?

திருவடிகள் எல்லாம் செம்மஞ்சக் குழம்பாய் இருப்பானேன்?

இப்படிப்பட்ட அடையாளங்களைப் பார்த்து நாச்சியாருக்கு மிகவும் திருவுள்ளம் கலங்கி இருக்கிறது.

ஆனபடியினாலே, உள்ளே இருக்கிறவர்களை வெளியிலே விட வேண்டாம் என்றும், வெளியிலே இருக்கிறவர்களை உள்ளே விட வேண்டாம் என்றும் -

இப்படி, கட்டுப்பாடு பண்ணிக் கொண்டிருக்கிற சமயத்திலே, உள்ளே விண்ணப்பம் செய்ய சமயம் இல்லை.

ஆனபடியினாலே, நேற்றைக்கு எழுந்தருளினவிடத்திலே தானே, இன்றைக்கும் எழுந்தருளச் சொன்னார்".

---

## அரையரிடத்தில் பெருமாள் அருளிச் செய்த வார்த்தை 2:

"திருக்கண் சிவந்திருப்பானேன் என்றால் - நாம் செங்கோலுடைய திருவரங்கச் செல்வனார் ஆனபடியினாலே, கவிரி முடித்து, கல்கச்சை கட்டி, வல்லயம் ஏந்தி, குதிரை நம்பிரான் மேலே ராத்திரி முழுவதும் நித்திரை இன்றி, ஜகத் ரக்ஷணார்த்தமாக ஜாகரூகனாய் இருந்தபடியினாலே திருக்கண் சிவந்து போச்சுது.

திருக்குழல் கற்றைகள் எல்லாம் கலைந்திருப்பானேன் என்றால் - காற்றடித்து கலைந்து போச்சுது.

கஸ்தூரி திருமண் காப்பு கரைந்திருப்பானேன் என்றால் - அதி கடோரமான ஸூரிய கிரணத்தால் கலைந்து போச்சுது.

திருவதரம் வெளித்திருப்பானேன் என்றால் - அஸுர நிரஸநார்த்தம் தேவதைகளுக்காக ஶங்கத்வானம் பண்ணினபடியினாலே வெளுத்துப் போச்சுது.

திருக்கழுத்து எல்லாம் நகக்ஷதமாய் இருப்பானேன் என்றால் - அதி ப்ரயாஸமான காடுகளிலே போகிற போது, பூ முள்ளு கிழித்தது.

திருமேனி எல்லாம் குங்குமப் பொடிகளாய் இருப்பானேன் என்றால் - தேவதைகள் புஷ்ப வர்ஷம் வர்ஷித்தபடியினாலே புஷ்ப ரேணு படிந்தது.

திருப்பரிவட்டங்கள் எல்லாம் மஞ்சள் வர்ணமாய் இருப்பானேன் என்றால் - ஸந்த்யா ராகம் போலே இருக்கிற திவ்ய பீதாம்பரம் ஆனபடியினாலே, உங்கள் கண்ணுக்கு மஞ்சள் வர்ணமாகத் தோன்றுகிறது.

திருவடிகள் எல்லாம் செம்மஞ்சக் குழம்பாய் இருப்பானேன் என்றால் - குதிரை நம்பிரான் மேல் ஏறி, அங்கவடிவமேல் திருவடிகளை வைத்துக் கொண்டு போனபடியினாலே திருவடிகள் சிவந்து போயின.

இப்படிப்பட்ட அடையாளமே ஒழிய வேறில்லை.

ஆனால், போது கழித்து வருவானேன் என்றால் - வேட்டையாடி வேர்த்து விடாய்த்து வருகின்ற சமயத்திலே, திருமங்கை ஆழ்வான் என்பவன் ஒருவன் வந்து, ஸர்வஸ்வ அபஹாரத்தையும் பண்ணிக் கொண்டு போனான். அவனைச் சில நல்ல வார்த்தைகளைச் சொல்லித் திருவாபரணங்களை மெள்ள வாங்கிக் கொண்டு போய், கருவூலத்தில் எண்ணிப் பார்க்குமிடத்தில் கணையாழி மோதிரம் காணாமல் போச்சுது.

அதற்காக, விடிய பத்து நாழிகை புறப்பட்டருளி, திருவீதிகள் எல்லாம் வலம் வந்து, கணையாழி மோதிரத்தைக் கண்டெடுத்துக் கொண்டு மீளவாரா நிற்கச் செய்தே, அப்பொழுது தேவதைகள் பாரிஜாத புஷ்பங்கள் கொண்டு சேவிக்க வந்தார்கள். நாம், நம்முடைய பெண்டுகளன்னியிலே சூடுகிறதில்லை என்று நமக்கு முன்னமே வரக்காட்டி நாமும் பின்னே எழுந்தருளினோம்.

ஆனபடியினாலே, நாம் கொடுத்த புஷ்பத்தையும் வாங்கிக் கொண்டு, நம்மையும் உள்ளே அழைக்கச் சொல்லவும்".

**நாச்சியார் அருளிச் செய்த வார்த்தை 2:**

கணையாழி மோதிரம் காணாமல் போனதே மெய்யானால் - விடிய பத்து நாழிகைக்குப் புறப்பட்டருளி உறையூரிலே போய், மின்னிடை மடவார் சேரி எல்லாம் புகுந்து, யதாமநோரதம் அநுபவித்து உண்டாய் இருக்கிற அடையாளங்கள் எல்லாம் திருமேனியிலே தோற்றா நிற்கச் செய்தேயும், அவ்வடையாளங்களையும் அந்யாதவாகக் கொண்டு, நாங்கள் ஏழைகள் ஆனபடியாலே இப்படிப்பட்ட வஞ்சநோக்திகளை எல்லாம் நேற்றைக்கு எழுந்தருளின இடத்தில் தானே சொல்லிக் கொண்டு, இன்றைக்கும் அங்கே தானே எழுந்தருளவும்".

---

**பெருமாள் அருளிச் செய்த வார்த்தை 3:**

"நாமானால் உறையூரைக் கண்ணாலே கண்டதுமில்லை; காதாலே கேட்டதுமில்லை.

துஷ்டர்களாய் இருக்கிறவர்களும் மனதுக்குச் சரிப்போனபபடி சொன்னால், நீரும் அந்த வார்த்தைகளைத் தானே கேட்டுக் கொண்டு, நம்மையும் ஒரு நாளும் பண்ணாத அவமானங்கள் எல்லாம் பண்ணலாமா?

நீங்கள் ஸ்த்ரீகள் ஆனபடியினாலே முன்பின் விசாரியாமல் பண்ணினீர்களாம் என்கிற அவமானம் உங்களுக்கே ஒழிய நமக்குத் தேவை இல்லை.

ஆனபடியினாலே, நாம் கொடுத்த புஷ்பத்தையும் வாங்கிக் கொண்டு, நம்மையும் உள்ளே அழைக்கவும்".

---

**நாச்சியார் அருளிச் செய்த வார்த்தை 3:**

"முந்தாநாள் அழகிய மணவாளப் பெருமாள் வேட்டையாடி, வேர்த்து விடாய்த்து எழுந்தருளினார் என்று அடியோங்கள் அதி ப்ரீதியுடனே எதிரே விடை கொண்டு, திருக்கை கொடுத்து, உள்ளே எழுந்தருளப் பண்ணிக் கொண்டு போய், திவ்ய ஸிம்மாஸனத்திலே ஏறியருளப் பண்ணி, திருவடி விளக்கி, திருவொத்துவாடை சாத்தி, திருவாலவட்டம் பரிமாறினோம்.

அப்போது, அதிக சிரமத்தோடே எழுந்தருளி இருந்தார். ஆனால் இளைப்போ என்று, வெந்நீர்த் திருமஞ்சனம் சேர்த்து ஸமர்ப்பித்தோம்.

அதை நீராடினது பாதியும், நீராடாதது பாதியுமாக எழுந்தருளி இருந்தார். ஆனால் இளைப்போ என்று, திருவறைக்குத் தகுதியான திவ்ய பீதாம்பரம் கொண்டு வந்து ஸமர்ப்பித்தோம்.

அதையும் எப்போதும் போல சாத்திக் கொள்ளாமல், ஏதோ ஒரு விதமாக சாத்தி அருளினார். ஆனால் இளைப்போ என்று, கஸ்தூரித் திருமண் காப்பு சேர்த்து ஸமர்ப்பித்தோம்.

அதையும் எப்போதும் போல சாத்திக் கொள்ளாமல், திருவேங்கடமுடையான் திருமண் காப்பு போல, கோணாமாணாவாய்ச் சாத்தி அருளினார். ஆனால் இளைப்போ என்று, தங்கப் பள்ளயத்தில் அப்பம் கலந்த சிற்றுண்டி அக்காரம் பாலில் கலந்து, வர்க்க வகைகள் முதலானதுகளைச் சேர்த்து ஸமர்ப்பித்தோம்.

அதையும் அமுது செய்தது பாதியும், அமுது செய்யாதது பாதியுமாய் எழுந்தருளி இருந்தார். ஆனால் இளைப்போ என்று, சுருளமுது திருத்தி ஸமர்ப்பித்தோம்.

அதையும் அமுது செய்யாதபடி தானே எழுந்தருளி இருந்தார். ஆனால் இளைப்போ என்று, திருவநந்தாழ்வானைத் திருப்படுக்கையாக விரித்து, அதன் மேலே திருக்கண் வளரப் பண்ணி, அடியோங்கள் திருவடிகளைப் பிடித்துக் கொண்டிருந்தோம்.

தாம் வஞ்சகர் ஆனபடியினாலே, எங்களுக்கு ஒரு மாயா நித்திரையை உண்டாக்கி, எங்கள் கருவூலம் திறந்து, எங்கள் ஸ்த்ரீ தனங்களான அம்மானை பந்து கழஞ்சி பீதாம்பரங்களையும் கைக்கொண்டு, இன்னவிடத்துக்கு எழுந்தருளுகிறோம் என்று சொல்லாதபடி எழுந்தருளினார்.

அந்த உத்தர க்ஷணமே அடியோங்கள் அச்சமுடன் திடுக்கிட்டு எழுந்திருந்து, திருப்படுக்கையைப் பார்க்குமிடத்தில், பெருமாளைக் காணாமையாலே கை நெரித்து, வாய் அடித்து, அணுக விடும் வாசற் காப்பாளரை அழைத்துக் கேட்கும் அளவில் -

அவர்கள் வந்து, அம்மானை பந்து கழஞ்சி பீதாம்பரமான ஸ்த்ரீ தனத்தையும் கைக்கொண்டு, இன்னவிடத்துக்கு எழுந்தருளுகிறோம் என்று சொல்லாதபடி எழுந்தருளினார் என்று சொல்ல வந்தார்கள்.

அந்த உத்தர க்ஷணமே அந்தரங்க பரிஜனங்களாய் இருக்கிற திருச்சேவடிமார்களை அழைப்பித்தோம். அவர்கள் வந்து, அடி பிடித்து, அடி மிதித்துக் கொண்டு போனவிடத்திலே, உறையூரிலே கொண்டு போய் விட்டது.

அங்கே மச்சினி என்று ஒருத்திக்கு முறைமை சொல்லி, மற்றொருத்தியை மடியைப் பிடித்ததும், கச்சணி பொன் முலை கண்ணால் அழைத்ததும், கனி வாய் கொடுத்ததும், கையில் நகக் குறி மெய்யங்கம் ஆனதும், கார் மேனி எங்கும் பசுமஞ்சள் பூத்ததுமாகக், கரும்பு தோட்டத்தில் யானை ஸஞ்சரிக்கிறாப் போலே தேவரீர் ஸஞ்சரிக்கிறீர் என்று, நாங்கள் உசிதமாகப் போக விட்ட தூதியோடி அங்கே உள்ளபடி வந்து சொன்னாள்.

உம்மாலே எங்கள் மனது உலை மெழுகாய் இருக்கிறது. ஒன்றும் சொல்லாதே போம் போம்".

---

**பெருமாள் அருளிச் செய்த வார்த்தை 4:**

ஒருவருக்கு ஒருவர் ஸம்ஶயப்பட்டால், அந்த ஸம்ஶயம் ஒரு ப்ரகாரத்திலும் தீராமல் போனால், ப்ரமாணத்தாலே தீர்த்துக் கொள்வார்கள். அந்தப்படி, ப்ரமாணம் பண்ணித் தருகிறோம்.

நாம் தேவாதி தேவன் ஆனபடியாலே, தேவதைகளைத் தாண்டித் தருகிறோம்.

ஸமுத்திரத்திலே முழுகுகிறோம்.

அக்நிப் ப்ரவேஶம் பண்ணுகிறோம்.

பாம்புக் குடத்திலே கை இடுகிறோம்.

மழு ஏந்துகிறோம்.

நெய்க் குடத்திலே கை இடுகிறோம்.

இப்படிப்பட்ட ப்ரமாணங்களையானாலும் வாங்கிக் கொண்டு, நாம் கொடுத்த புஷ்பத்தையும் வாங்கிச் சூட்டிக் கொண்டு, நம்மையும் உள்ளே அழைக்கச் சொல்லவும்".

---

**நாச்சியார் அருளிச் செய்த வார்த்தை 4:**

ஒருவருக்கு ஒருவர் ஸம்ஶயப்பட்டால், அந்த ஸம்ஶயம் ஒரு ப்ரகாரத்திலும் தீராமல் போனால், ப்ரமாணத்தாலே தீர்த்துக் கொள்வார்கள்.

லோகத்திலே ப்ராம்மணனுக்கும் ப்ராம்மணனுக்கும் வாக்கு வாதம் வந்தால் ப்ராம்மணன் ப்ராம்மணனைத் தாண்டிக் கொடுப்பான்.

தாம் தேவாதி தேவன் ஆனபடியாலே தேவதைகளைத் தாண்டிக் கொடுக்கிறோம் என்று சொல்ல வந்தீரே! அந்த தேவதைகள் தம்முடைய திருவடிகளை எப்போது காணப் போகிறோம்! எப்போது காணப் போகிறோம்! - என்று ஸதா ப்ரார்த்தித்துக் கொண்டிருக்க, அவர்களை வலுவிலே தாண்டித் தருகிறோம் என்றால் வேண்டாம் என்பார்களா?

ஸமுத்திரத்திலே முழுகுகிறோம் என்று சொல்ல வந்தீரே! ப்ரளய காலத்திலே ஸகல லோகங்களையும் திருவயிற்றிலே வைத்து ரக்ஷித்து, ஒரு ஆலிலைத் தளிரிலே கண்வளர்ந்த தமக்கு, ஸமுத்திரத்திலே முழுகிகறது அருமையா?

அக்நி ப்ரவேஶம் பண்ணுகிறோம் என்று சொல்ல வந்தீரே! ப்ரம்மாவுக்காக உத்தர வேதியில் ஆவிர்பவித்த தமக்கு, அக்நியில் முழுகுகிறோம் என்றால் அக்நி சுடுமா?

பாம்புக் குடத்திலே கையிட்டுத் தருகிறோம் என்று சொல்ல வந்தீரே! சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம் என்று ஸதா ஸர்வ காலம் திருவநந்தாழ்வான் மேலே திருக்கண் வளர்த்திருக்கிற தமக்கு, பாம்புக் குடத்திலே கையிட்டால் பாம்பு கடிக்குமா?

மழு ஏந்துகிறோம் என்று சொல்ல வந்தீரே! கோடி ஸூர்ய ப்ரகாஶமான திருவாழி ஆழ்வானை ஸதா திருக்கையிலே தரித்துக் கொண்டிருக்கிற தமக்கு, அப்ரயோஜனமான இரும்பு மழு ஏந்துகிறது அருமையா?

நெய்க் குடத்திலே கை இடுகிறது அருமையா?

இப்படிப்பட்டிருக்கிற பரிஹாஸ ப்ரமாணங்களை எல்லாம் சரிப்போன இடத்திலே தானே பண்ணிக் கொண்டு, இன்றைக்கும் அங்கே தானே எழுந்தருளவும்".

---

**பெருமாள் அருளிச் செய்த வார்த்தை 5:**

நாம் உத்ஸவார்த்தமாகப் புறப்பட்டருளி, திருவீதிகள் எல்லாம் வலம் வந்து, தேவதைகள் புஷ்ப வர்ஷம் வர்ஷிக்க, ப்ராம்மணர்கள் எல்லாரும் ஸ்தோத்திரம் பண்ண, இப்படி பெரிய மநோரதத்தோடே தங்களிடத்தில் வந்தால், தாங்கள் எப்போதும் போலே ஆதரியாமல்படிக்கு அபராதங்களைப் பண்ணினோம் என்றீர்கள்.

நாமானால் உறையூரைக் கண்ணாலே கண்டதும் இல்லை, காதாலே கேட்டதும் இல்லை என்று சொன்னோம். அத்தை, அப்ரமாணமாக நினைத்தீர்கள்.

ஆனால், ப்ரமாணம் பண்ணித் தருகிறோம் என்று சொன்னோம். அத்தை, பரிஹாஸ ப்ரமாணம் என்று சொன்னீர்கள்.

இப்படி, நாம் எத்தனை சொன்ன போதிலும் அத்தனையும் அந்யதாவாகக் கொண்டு, சற்றும் திருவுள்ளத்தில் இரக்கம் வராமல், கோபத்தாலே திருவுள்ளம் கலங்கி, திருமுக மண்டலம் கறுத்து, திருக்கண்கள் சிவந்து, இப்படி எழுந்தருளி இருந்தால் நமக்கென கதி இருக்கிறது?

அழகிய மணவாளப் பெருமாள் ஸ்ரீரங்க நாச்சியார் ஸந்நிதி வாசலிலே தள்ளுப்பட்டுக் கொண்டிருக்கிறாராம் என்கிற அவமானம் உங்களுக்கே ஒழிய நமக்குத் தேவை இல்லை.

ஆனபடியினாலே, நாம் கொடுத்த புஷ்பத்தையும் வாங்கிக் கொண்டு நம்மையும் உள்ளே அழைக்கச் சொல்லவும்".

---

**நாச்சியார் அருளிச் செய்த வார்த்தை 5:**

"தாம் வருஷா வருஷம் அடமாய் எழுந்தருளி இருந்து, தமக்குச் சரிப்போனபடி நடந்து போட்டு, பின்னும் இங்கே வந்து நாம் ஒன்றும் அறியோம் என்றும், ப்ரமாணம் பண்ணித் தருகிறோம் என்றும் - பரிஹாஸங்களைப் பண்ணி, இப்படிப்பட்டிருக்கிற அக்ருத்யங்களைப் பண்ணிக் கொண்டு வருகிறீர்.

நாமானால் பொறுக்கிறதில்லை. நம்முடைய ஐயர் நம்மாழ்வார் வந்து மங்களமாகச் சொன்ன வாய் மொழியினாலே பொறுத்தோம்.

உள்ளே எழுந்தருள வேணும்".

---